ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

महात्मनां सत्ववशाद्व्यवस्थिति दृढा परिज्ञानसमाहितात्मनाम् ।
परापवादेष्वपि, मादृगात्मनः समानयेत् कल्पनया नयांकुशम् ॥

மனதை வசப்படுத்திக் கொண்டவன்தான் மகிழ்ச்சியடைவான். அனேகமாய் பிராணிகளுக்கு மனது ஸ்வாதீனப்படுவதில்லை. காமக்குரோதாதிகளுக் கிடுபட்டுக் கண்டவிடமெல்லாம் கிளம்பிவிடுகிறது. அதிலும் பராபவாதம் கேழ்க்கப்பட்டால் உடனே வெறிகொண்ட மதயானைபோல் சீறிக்கொண்டு புறப்படுகின்றது. ஒரு நிலையிலிருப்பதில்லை. மஹான்களுக்கோவெனில் ஸத்துவகுணவசத்தால் மனது அப்படிப் போய்விட மாட்டாது. பரவிநிற்கும் பரிபூர்ண ஞானத்தால் ஸமாதியில் மனதை அடக்கி ஸ்வாதீனம் செய்துகொண்டவர்களாகையால் அந்த மஹானுபாவர்களுடைய மனது பராபவாதம் பலவிதமாகக் கேழ்க்கப்பட்டாலும் விகாரப்படாமல் திடமாக ஒரேகுறியில் நிலைத்து நிற்கும். மற்றவர்களுக்கோவெனில் அப்படி நிலைத்திராது. மனது முக்கியமானலக்ஷியத்தில் நிலைக்காவிடில் சுகம் கிடைக்காது. சுகத்தில்தான் எல்லோருக்கும் அபேக்ஷையிருக்கிறது. அதனால் எப்படியாவது மனதை நிலைத்திருக்கும்படி செய்துகொள்வது மானிடப்பிறவி பெற்றவர்களின் முக்கியக் கடமையாகும். அதற்காகத்தான் நமது சாஸ்திரங்களில் மனதையடக்கி நிலைநிறுத்துவதற்கு வேண்டிய ஸாதனங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வழியிற்சென்று மனதைநிலைக்கச் செய்யவேண்டுமேயன்றி சாஸ்திர விபரீத வழியில் போகக்கூடாது. மனதை யடக்குவது எளிதான கார்யமல்ல. கெட்டிக்காரனான மாவுத்தன் மதம்பிடித்த காட்டானையை நாடெங்கும் திரியாமல் மாவட்டியால் வசப்படுத்தி நிலைக்கச்செய்வது போல் விஷயங்களில் ஆசைகொண்டு வெறிபிடித் தலையும் மனதைச் சாஸ்திரீயவழியில்க் கட்டுப்படுத்தி முக்கியலக்ஷியத்தில் நிலைக்கச்செய்ய நம்மைப்போலொத்தவர் ஞானமென்னும் அங்குசத்தால் அடக்க முயல வேண்டும். பிறர் நிந்திக்கும்பொழுது விவேகமில்லாமல் போனால் மனது வெறிபிடித்துக் கட்டுக்கொள்ளாமல் கலங்கிவிடும். அந்தஸமயத்தில் கற்றுணர்ந்த கல்விமான்கள் விவேகமெனப்படும் பகுத்தறிவைப் பலமாக உபயோகிக்கவேண்டும். பாமரர்கள் தமக்கும் பகுத்தறிவிருப்பதாகச் சொல்லிக்கொண்டு பராபவாதம் செய்வதையே பெரியகார்யமாக நினைத்துக்கொண்டு ஸாத்விகர்களையும் தூஷிக்கிறார்கள். அந்த ஸமயத்தில் கோபா வேசங்கொண்டு கிளம்பிவிடாமல் மனதை ஞானாங்குசத்தால் அடக்கவேண்டும். இதற்காகவே 'ஞானாங்குசம்' என்றதோர் அரிய சிறிய நூலைப் பெரியோர் செய்திருக்கிறார்கள். அதைப்படித்து மனனம் செய்து மனதை யடக்கி மகிழ்ச்சியடைவதே மானிடப்பிறவியின் பயனாகும். கிடைத்தற்கரிய அப்பிறவியைப் பயன்படச்செய்து யாவரும் பரமபுருஷார்த்தத்தை யடைவார்களாக. சுபம்

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

ப்ராஜாபதி-ஷு தை-மீ ௮௨

ஆர்யதர்ம விஜயம்.

நமது ஆர்யதர்மம் நல்லகாலமாய் பிறந்த தைமாதத்தில் தனது பால்யப்பருவத்தை முடித்துக்கொண்டு யௌவனப் பருவத்தின் முதலாவது ஆண்டான 17-வது வயதை ஸ்ரீ சந்திர மௌளீசுவர கருணையாலும், ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீமத் ஆசார்ய பாதாளுடைய பரிபூர்ணப் பிரஸாதத்தாலும் அடைந்து, மனதையடக்கி மகிழும் மார்க்கமானதும், வைதிகமத சிரோரத்னமானதும், ஆகிய அத்வைதமதத்தின் ரஹஸ்ய தத்துவங்களையும், விவேக வைராக்கியாதி ஸாதனங்களையும், அந்தரங்க ஸாதனங்களான சமாதிகளையும், பஹிரங்க ஸாதனமான நிஷ்காம கர்மானுஷ்டான வைபவத்தையும், பிரகாசிக்கவெண்ணி விஜயமாகிவருகிறது. இஹத்தில் அநுபவிக்கவேண்டிய விஷயபோகங்களைப் பற்றியும், அவைகளின் ஸாதனங்களைப்பற்றியும் படிக்க வேண்டியதில்லை. படிப்பில்லாத பசு பக்ஷி முதலிய பிராணிகள் பிரத்தியக்ஷத்தாலேயே சப்தாதி விஷயங்களை அநுபவிக்கவில்லையா? நன்றாய் அநுபவிக்கின்றன. அவைகள் அநுபவிப்பதுபோல மனிதன்கூட அநுபவிக்க முடியாது. மானிடப்பிறவியையடைந்தும், மூன்று காலங்களையும் ஊஹித்தறியும் சக்திவாய்ந்த மூளையைப்பெற்றும், பாபமில்லை—புண்ணியமில்லை—பரலோகமில்லை—பமேசுவனில்லை புனிதமான பிரமாணங்களில்லை—என்பதாதியாக ப்பசுக்கள் நினைப்பதுபோல நினைத்துக்கொண்டு மாத்திரமில்லாமல் வாக்கையடைந்த விசேஷத்திற்காக அந்த நினைவை வெளிப்படுத்தி வருவாரானுல் பசுக்களைவிட அந்தப்பாமர் அடைந்த விசேஷம் என்னவோ தெரியவில்லை. “உருவம் வேறுபட்டிருந்தாலும் மூளை ஒரேவிதந்தான்” என்பது வெளிப்படுவதைவிட வேறு விசேஷமிருப்பதாகத் தெரியவில்லை. ஆனல் ஒரு விசேஷமுண்டு.

பசு பக்ஷி முதலிய ஜந்துக்கள் எதைநினைத்தாலும், எதைச் செய்தாலும், ப்ரத்யவாயம் கிடையாது. மனிதனுகப்பிறந்து விட்டு சாஸ்திர விபரீதமாக நினைத்தும், நடந்தும் வருவானுகில் பாபத்தையே யடைவான். அந்தப் பிறவியைவிட அவர்களுக்கு பசு பக்ஷி ஜன்மமே சிறந்ததாகும். ப்ரத்யவாயமாவது உண்டாகாமலிருக்குமல்லவா? இந்தக்கருத்தை:—

> अपि मानुष्यकं लब्ध्वा भवन्ति ज्ञानिनो न ये ।
> पशुतैव वरं तेषां प्रत्यवाया प्रवर्तनात् ॥

என்ற நீதி நூலும் கூறுகின்றது. அதனுல் மனிதனுய்ப்பிறந்தவன் முன்ஜாக்கிரதையாயிருந்து பாபம் நேராமலிருக்கும்படி பிரயத்தினம் செய்யவேண்டும். பராபவாதம் சொல்லக்கூடாது. நாஸ்திக்யம் பேசக்கூடாது. முன் பின் இருக்கக்கூடிய ஸம்பவங்களைப்பற்றி மூளையில் யோசித்துப் பார்க்கவேண்டும். யோசித்து அநுமானுதிகளால் ஊஹித்துப்பார்த்தால் மறுபிறப்பு உண்டென்பது விளங்கும். அப்படியானுல் ஒரு மானிடப்பிறவியில் செய்தவினை அடுத்த பிறவிகளில் தொடருமென்பது தோன்றும். அப்பொழுது முன்பிறவிகளில் எப்படிப்போனுலும் இனி வரும் பிறவியிலாவது நல்வினையின் பயனுன நன்மையே கிடைக்கவேண்டுமெனக்கருதுவதே முக்கியமென்பது தெரியும். பிறர் பழி கூறினுலும் பேசாமல் சாந்தியையடையச் சக்திவரும். அதனுல் ஸகல சிரேயஸ்ஸையும் அடையலாம். இவ்வாறு பிராணிகள் கரையேற வேண்டிய ஞான வழியை ஞாபகப்படுத்தி விஜயமாய் வரும் நம் ஆர்யதர்மத்தை யாவரும் நல்வரவேற்றி ஆதரித்து ஆனந்தப் படுவார்களாக.

ஓர் கோரிக்கை.

இப்பத்திரிகை வாரம் ஒருமுறை வெளிவரும். இப்படிக்கு 16-வருஷகாலமாய் வெளிவந்து கொண்டிருக்கிறது. ஸ்ரீ காமகோடி பீடாதிபதியாகிய கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்காசாரியாள் மகா ஸந்நிதானம் அநுக்கிரகித்தும் மீ 1-க்கு ரூ 100-க்குகுறையாமல் கையைவிட்டு செலவாகிறது. நம்முடைய

ஆரியமதம் எல்லாருக்கும் தெரியவேண்டுமென்று கருதி மகா ஸந்நிதானம் இவ்வளவு பெரிய உபகாரம் செய்கிறார்கள். ஒவ்வொருவரும் இப்பத்திரிகையை படித்து தர்மத்தை தெரிந்து' தெரியாதவர்களுக்கு தெரிவிக்கவேண்டியது. ஒவ்வொரு கிராமத்திலும், பள்ளிக்கூடத்திலும், ரீடிங் ரூமிலும், இப்பத்திரிகை பிரசுரிக்கவேண்டும், மதம் கற்பிக்கவும் மதாபிமானம் உண்டாக்கவும் மதாநுஷ்டானம் செய்விக்கவும் இது ஒரு மார்க்கமாகும், ஆரிய மதாபிமானிகள் இப்பத்திரிகையை பார்த்து தகுந்த உபயோகத்துக்கு வரும்படி செய்விக்க கோரப்படுகிறது இதன் உபயோகத்தைவிர்த்திசெய்யத் தகுந்த யோஜனை ஏற்பாடுகளைத் தெரிவித்தால் அவைகளையும் அனுஷ்டிக்கக்கூடிய யத்தினங்களைச்செய்யத் தயாராயும் இருக்கிறோம். இப்பத்திரிகை விஷயமாய் எந்த உபகாரத்தையும் எதிர்பார்க்கிறோம்.

வருஷச்சந்தா ரூ 3. மாணவர் சந்தா ரூ. 2

பத்திராதிபர்.

ஸ்ரீ நடேசஸ்துதி

(முன்தொடர்ச்சி)

मायामोहितमानसस्य भगवन् संसारपाथोधिजं
सर्वं भाति सुखावहं क्षणमहो दुःखावहं च क्षणम् ।
सर्वं तत्किल दुःखमेव हृदये निधार्य तत्वार्थगः
सत्यानन्दपरो मुहुः श्रुतिशिखागम्यं त्वदंघ्रिं भजे ॥५१॥

ஓ ஸர்வைச்வர்ய ஸம்பந்ந! மாயையால் மோகித்த மனஸ்ஸை உடைய ஜநத்துக்கு சம்சார சமுத்ரத்திலுண்டான சமஸ்தமும் கொஞ்சகாலம் சுகத்தைக் கொடுப்பதாயும் கொஞ்சகாலம் துக்கத்தைக் கொடுப்பதாயும் தோன்றுகிறது. வேதாந்த விசாரஞ் செய்து சச்சிதானந்தஸ்ரூபத்தையே தியானஞ்செய்கிற நான் அவை எல்லாவற்றையும் துக்கரூபமென்றே மனசில்தீர்மானித்து வேதாந்த வேத்யமான உம்முடைய சரணத்தை சதாபஜிக்கின்றேன்.

श्रीमद्व्योमसभेश दुष्टकरण स्संभासिनीं मंजुलां
ब्रह्मानन्दविधायिनीं गिरिसुतानेत्रांबुजानन्दिनीं
सन्द्रष्टुं कमलासनादिविनुतां शक्नोमि किं वा जड-
स्त्वन्मूर्तिं निगमेडितां सुकृतकृन्नस्यामहं चोद्विभो ॥५२॥

ஓ சிதம்பர சபாநாத! ஓவிபோ!! துஷ்ட இந்திரியங்களை உடைய மூடனான நான்முன் ஜன்மாவில் புண்யத்தைச்செய்யாமலிருந்தால் பிரகாசிக்கின்றதும் அழகுபொருந்தியதும் பிரும்மானந்தத்தைத் தருகிறதும் பார்வதி தேவியின் நேத்ரகமலங்களுக்கு ஆனந்தத்தைக்கொடுக்கிறதும் பிர்மாதி தேவர்களால் ஸ்துதிக்கப்பட்டதும் வேதங்களால் ஸ்துதிக்கப்பட்டதுமான உம்முடைய மூர்த்தியை பார்ப்பதற்கு எப்படி சமர்த்தனாகுவேன். (52)

भक्त्या शंकर मामकीननमनैर्नुत्याऽथवाऽस्मिन्जने
कारुण्यादुत तावकीनचरणांभोजस्य संपूजया ।
त्वन्मूर्तीक्षणलोललोचनवतो दीनाग्रगण्यस्यमे
क्षिप्रं हैमवतीपते नटपते खेदप्रहाणं कुरु ॥५३॥

ஓ சங்கரா! பார்வதி காந்த!! ஓ நடநாயக!!! பக்தியால் செய்யப்பட்ட என்னுடைய நமஸ்காரங்களினாலாவது ஸ்துதியினாலாவது என்னிடத்திலுண்டான கருணையினாலாவது உம்முடைய சரண கமல பூஜையினாலாவது உம்முடைய மூர்த்தி தர்சனத்தில் ஆசையுள்ள கண்களை உடைய தீனசிகாமணியான என்னுடைய துக்க நிவர்த்தியை சீக்கிரஞ்செய்யும். (53)

त्वत्पूजासमये दिगन्तकरिणस्त्रस्यन्तिकंपान्विता:
घण्टातूर्यमृदंगकादिनिनदै:, त्वद्भक्तघोषैरपि ।
किंच त्वद्वदनांबुजं विजयते रत्नत्रिपुण्ड्रोज्वलं
मच्चेतश्च विनम्रपादकमलं दृष्ट्वा मुदं विन्दति ॥५४॥

ஓ ஆனந்தநடேச! உம்முடைய பூஜாகாலத்தில்; மணி—தூர்ய மிருதங்கம்—முதலான சப்தங்களாலும் உம்முடைய பக்தஜந கோஷங்களாலும் நடுங்குகின்ற திக்கஜங்கள் பயத்தை அடைகின்றன. மேலும் இரத்தினத் திருபுண்டரத்தால் பிரகாசிக்கின்ற உம்முடைய முககமலமானது சர்வோத்கர்ஷமாய் விளங்கு

கின்றது. என்னுடையமனமும் உம்முடைய குஞ்சித சரண கமலத்தை தர்சித்து சந்தோஷத்தை அடைகின்றது. (54)

दुग्धं खेदमुपेयुषीशसुरभेः स्मृत्वाऽभिमन्यौ मुनौ
तत्तातेच पुरस्तवैव तनयं निक्षिप्य निष्टापरे ।
क्षुद्बाधापरिपीडिताय शिशवे क्षीरं प्रदातुं पुरा
या जाता करुणा तयैव कृपया मद्वाच्छितं पूरय ॥५५॥

ஓ ஈச! அபிமன்யு மஹர்ஷியானவர் மாமாவான வசிஷ்ட மஹர்ஷியின் கிருகத்தில் சாப்பிட்ட, காமதேனுவின் பாலை நினைத்து பிதாகொடுக்கும் மா—கனி—கிழங்கு முதலானதுகளை விரும்பாமல் அழும்பொழுது பிதாவான வியாக்ரபாத மஹர்ஷி உம்முடைய சந்நிதியிலேயே குழந்தையைவைத்து தபஸ்செய்யும் பொழுது பசிபாதையால் அழுகிற குழந்தையின்பொருட்டு பால்கொடுப்பதற்கு முந்தி எந்த தயை உண்டாயிற்றோ! அந்த தயையால் என்னுடைய இஷ்டத்தை பூர்த்திசெய்யும். இச்சரித்திரத்தை 17-வதுஸ்துதியில் வியாக்ரபாத சரித்ரத்தில் எழுதியிருக்கிறது. (55)

பரமபாவனமான இந்த நடேசஸ்துதியின் வீக்ஷண படன மனனங்களுக்கு சாதனமாயும் நாஸ்திக்யமான பெருந்தீயால் பொசுக்கப்படுகின்ற இவ்வுலகத்தில் ஆர்யதர்ம சரித்திர ரூபமான திவ்ய வர்ஷத்தால் பெரும் சுகமளிக்கின்றதாயுமுள்ள இந்த ஆர்யதர்ம பத்திரிகையை வீடுகள்தோறும் பசி நிவர்த்திக்காக தண்டுலம் பருப்பு முதலியவற்றை தேடிக்கொள்வதுபோல் சகல ஜநங்களுக்கும் இம்மை மறுமை சுகத்துக்கு விரோதியான மனசின் காலுஷ்யத்தை நிவர்திப்பதின் பொருட்டு சந்தாதார்களாய்சேர்ந்து இப்புதியவருஷத்தில் ஆதரிக்கவேணுமாய் ஸ்ரீ சித்ஸபேசரைப் பிரார்த்திக்கின்றோம். சுபம்.

தொடரும்

சிதம்பரம் ராஜா சோமசேகர தீக்ஷிதர்.

ஸத்குருவை ஸேவியுங்கள்.
சிரத்தையோடு சேருங்கள்.

மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்கள்

(முன் தொடர்ச்சி)

अद्वैतानन्दसाम्राज्य सिंहासनविहारिणः ।
जगदाचार्यवर्यं श्रीशङ्करार्याननुपास्महे ॥

அத்வைதானந்த ஸாம்ராஜ்ய ஸிம்மாஸனத்தில் வீற்றிருக்கும் ஜகத்குரு ஸ்ரீசங்கரபகவத்பாதாளை உபாஸிக்கின்றோம்.

मध्वसिद्धान्तदुर्ध्वान्तविध्वंसन विभाकरान् ।
मधुसूदनमुख्यांश्च पूर्वाचार्याननुपास्महे ॥

மத்வ ஸித்தாந்தமாகிய இருளைப்போக்கடிப்பதில் ஸூர்யர்களாக விளங்கும் மதுஸூதன ஸரஸ்வதீ பிரும்மானந்த ஸரஸ்வதீ முதலிய பூர்வாசார்யாளையும் உபாஸிக்கின்றோம்.

श्रीमन्मध्वावतारीयाद्भुतलीलारहस्यकम् ।
सम्यगाविष्करोम्यद्य विमृशन्तु विमत्सराः ॥

சென்ற வர்ஷத்தில் ஸ்ரீ உத்திராதிமடத்து ஸ்வாமிகளவர்களும் அவர்களுடைய சிஷ்யர்களான ஸ்ரீ கிருஷ்ணசார் முதலியவர்களும் தமது த்வைதமதத்தில் மூலத்திலேயே விளங்கும் பாமரர் முதல் பண்டிதர் வரையில் யார் கேட்டாலும் பரிஹஸிக்கும்படியான நிலையிலுள்ள பரம ஆபாஸங்களைக் கொஞ்சங்கூட கவனித்துப்பார்த்து நமது மதம் இவ்வளவு கேவலமாயிருக்கின்றதே என்று துக்கிக்கவேண்டிய இடத்தில் கொஞ்சங்கூட துக்கிக்காமல் அந்த ஆபாஸங்களை எல்லாம் குணங்களாகவே மதித்துக் கொண்டு அதிதுரூஹமாயும் ஸ்ரீ பரமேசுவரனுடைய பரிபூர்ணனுக்ரஹமிருந்தால் சிரமமன்னியில் புரியக்கூடியதும் பரமேசுவர வித்வேஷம் குடிகொண்ட தமது மனதில் தூரமாகப் பார்த்து எவ்வளவு புஸ்தகங்கள் படித்தாலும் எவ்வளவு பெரியோர்களிடம் எவ்வளவு தடவை பாடம் கேட்டாலும் ஸ்புரிக்காததும் வேதங்களின் பரம தாத்பர்யவிஷயமாயும் வைதிகோத்தமமாயும் பரம வைதிகர்களான பரமாசார்யாளாலே இதரர் கொஞ்சங்கூட அசைக்கமுடியாமல் ஆஸேது ஹிமாசலம் பாரதபூமியில் ஸ்தாபிக்கப்பட்டதுமான அத்வைத மதத்தை அதன் கம்பீரமான அபிப்

ராயம் இன்னதென்றே தெரிந்துகொள்ளாமல் தமது ஸ்வல்ப்ப புத்தியால் அதை அவைதிகமென்று வா கூசாமல் சொல்லிக் கொண்டும் எந்த பரமாசார்யாளாலே விலக்கப்பட்டு புத்தமதம் இந்தியாவைவிட்டே விலகிப்போயிற்றோ, அப்பேர்ப்பட்ட பரமா சார்யாளது மதத்தைப் பிரச்சன்ன பௌத்தமதமென்றும் அவர் களது பெரும்பாலும் ஆஸேது ஹிமாசலம் விரிந்திருக்கும் சிஷ்ய வர்க்கங்களை வா கூசாமல் ஆஸாசம்பத்துள்ளவர்களென்றும் உளறிக்கொண்டு ஊரூராய்ச் சுற்றிவருகின்றார்கள் என்பது யாவருமறிந்த விஷயம். அவ்விதம் வருமவர்களுக்கு அவர்களின் மதத்திலுள்ள ஆபாஸங்கள் பிறர் காட்டினால்தான் தெரியுமான தால் அவைகள் அவர்களுக்குப் புலப்பட்டால்தான் அவர்களது பித்தம் தெளியுமானதால் அவைகளை நாம் அவர்களுக்கு உணர்த் தக்கருதி அவர்களது பித்தத்திற்கு மருந்தாக மத்வாவதாராத்புத லீலாரஹஸ்யங்கள் என்கிற பெயருடன் விஷயத்தை ஆர்யதர்ம பத்திரிகையின்மூலம் எழுதலானோம். அதில் சென்ற வருஷத் தில் ஐந்து ரஹஸ்யங்கள் எம்மால் வெளிப்படுத்தப்பட்டன, அதில் முதலாவது ரஹஸ்யம் "மத்வமதம் பிரச்சன்ன சார்வாகமதம்" என்பது. இரண்டாவது "மத்வமதம் பௌத்தமதாபிமானம் அதிகமாகவுள்ளது" என்பது. மூன்றாவது "மத்வமதம் ஜைன மதத்தில் விசேஷ பக்தியுள்ளது" என்பது. நான்காவது "மத்வ மதத்தில் சுருதிஸ்மிருதி முதலிய ஸகல கலைகளும் உலக விலக்ஷ ணம்" என்பது. ஐந்தாவது "மத்வமதம் ஆத்மப்பிரசம்ஸை பர நிந்தை என்னும் இரண்டு முக்யகுணங்களமைந்தது" என்பது. இனி ஆறுவது ரஹஸ்யத்தை வெளியிட முன்வருகிறோம். இவ் வித மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்களை மாத்ஸர்யமில்லாத ஸமா ஸாபிமானிகள் விமர்சிப்பார்களாக. ஆறுவது ரகஸ்யத்தின் விவ ரணம் அடுத்த ஸஞ்சிகையில் வரும்.

போலகம் சு. ஸ்ரீராமசாஸ்திரிகள்.

சுருதி தாத்பர்யத்தைக் கவனியுங்கள்.
விரோதவாதத்தைவிட்டொழியுங்கள்.

உபதேச ஸாரம்.

குருமுகமாகவே விசாரம் செய்யவேண்டும்,

பகுத்தறிவுள்ள பண்டிதமணிகாள்! கானல் நீருக்கொப்பான ஸம்சாரவாழ்க்கையில் ஸச்சிதானந்தவடிவமான ப்ரம்மஸ்வரூபமொன்றைத்தவிர நிலையாயுள்ளவஸ்து வேறொன்றுமில்லையென்பது உங்களுக்குத் தெரியாததில்லை. ஆனால்'இந்த உண்மை ஸகல சாஸ்திரங்களின் கரைகண்டவனாலும் முதலிலே கண்டு கொள்ளமுடியாது. அப்படியிருக்கையில் சாஸ்திரவாஸனையையே முகர்ந்துபார்க்காத பிராணிகளுக்கு இவ்வுண்மை புலப்படாதெனச் சொல்லவேண்டுமோ! ஏனெனில்? இப்பிரபஞ்சத்தில் பிரும்மதேவரால் ஸிருஷ்டிக்கப்பட்ட காந்தை (பெண்) கனகம் (பொன்) என்பதாதி வடிவமான வலையில் மீன்களைப்போல் ஸர்வப்பிராணிகளும் சிக்கிக்கொண்டு தன் சொரூபத்தைத் தெரிந்து கொள்வதிலும் பராமுகமாய் அல்லும் பகலும் ஸம்ஸார சக்கிரத்தில் சுழன்று சுழன்று கஷ்டப்பட்டு லேசலேசங்கூட ஆத்மதத்துவத்தை அறிந்துகொள்ள முடியாமல்பரிதபிக்கிறார்கள். பெண்ணாசையும் பொன்னாசையும் விட்டவனாகில அவனே மனுஷ்ய வடிவமான மஹேசுவரனெனலாம். அங்ஙனமே—

> वेधा द्वेधा भ्रमं चक्रे कान्तासु कनकेषु च ।
> तासु तेष्वप्यनासक्तः साक्षात् भर्गो नराकृतिः ॥

"பிரம்மதேவர் காந்தையிடத்திலும், கனகத்திலும் இரண்டுவிதமாக பிரமத்தைச் செய்திருக்கிறார். அவ்விரண்டிலும் பற்றற்றவன் மனுஷ்யாகாரமான ஸாக்ஷாத் பரமசிவனேயாவான்" என்று பெரியார் கூறியுள்ளார். அன்றியும் இவ்வளவோடே தான் கிருதார்த்தனுய்விட்டதாக எண்ணிக்கொண்டு உண்மையான சிரேயஸ்ஸாதனத்தினின்று திரும்பி விடுகிறார்கள். பிரும்ம ஸிருஷ்டியிலகப்பட்ட பிரபஞ்சம் உண்மைவழியைவிட்டுக் கோணல் வழியில் திரும்பியிருக்கையில் பிராணிகளுக்கு முதல் முதலிலே அந்தர்முகமான பிரவிருத்தியே வராது. அநேகாயிரம் பிராணிகளுள் யாரோ சிலருக்குத்தான் ஜன்மாந்தரங்களில் செய்த புண்ணிய பரிபாகவசத்தால், புத்திர—மித்திர—களத்திராதி விஷயங்களில்

வைராக்யமுண்டாகி, "நான் கர்த்தா என்ற அபிநிவேசமும், எனக்கு இந்த பலன் வேண்டுமென்ற எண்ணமும்" இல்லாமல் வேதத்தில் விதிக்கப்பட்ட கர்மங்களை நிஷ்காமமாகச்செய்த மஹிமையால் பாபங்கள் தொலைந்து பரமார்த்தம(உண்மைய)ான சிரேயஸ்ஸாதனத்தில் புத்திபிரவர்த்திக்கும். அதன்மேல் அவர்கள் அதற்கு அனுஸாரமாக முயலுவார்கள். இப்படி தத்துவஞானத்தில் பிரவிருத்திப்பவருள் பலர் பலவித விக்கினங்களால் உற்சாஹம் குறைந்து நடுவிலே நின்று விடுவார்கள். அடிக்கடி எவ்வளவு இடையூறுகள் நேரிட்டாலும் தமது கோரிக்கையை நிறைவேறவிடாமல் பிரதி பந்தகமாய் அமைந்துள்ள அவைகளை லக்ஷியம்செய்யாமல் விக்கினம் உண்டாக உண்டாக இரண்டு பங்கு உற்சாஹத்துடன் தமது இஷ்ட ஸித்திக்காக இராப்பகலாக ஒய்வு ஒழிவு இல்லாமல் மேன்மேலும் பிரயத்தினம் செய்பவர் சிலரேயாவர். அவர்களுக்குள்ளும் பரமார்த்த தத்துவத்தை ஸாக்ஷாத்கரிக்க சமர்த்தனானவன் ஒருவனே தேருவான்.

मनुष्याणां सहस्रेषु कश्चिद्यतति सिद्धये ।
यततामपि सिद्धानां कश्चिन्मां वेत्ति तत्वतः ॥

"பல்லாயிரம் மனுஷ்யர்களுக்குள் மோக்ஷ ஸித்திக்காக ஒருவன் தான் யத்தினம் செய்வான். அப்படி பிரயத்தினம் செய்தவர் அனேகருள் ஒருவன்தான் தத்துவத்தை அறிவான்" என்று பகவானும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார். அவ்வாறு ஸித்திபெற்ற உலக சிரேஷ்டனான ஒருவன்தான் ஸமாதி கலைந்து பிராரப்தவசத்தால் புத்தி வெளிநோக்கங் கொள்ளும்பொழுது ஜகத்தில் ஸர்வப் பிராணிகளும் முன்செய்த நல்வினை தீவினைகளின் பயனாக கர்ம பலத்தையே அனுபவித்துக்கொண்டு, தன் சொரூபத்தையும் உணராமல், ஸம்ஸார ஸமுத்திரத்தில மூழ்கிக் கஷ்டப்படுவதைக் கண்டு அந்தோ! கஷ்டம்! இப்படிப் பரிதபிக்கிறார்களேயன்றி அதனின்றும் திரும்பவில்லையே—என்று கருணையடைந்து லோகானுக்கிரஹத்திற்காக உபநிடதங்களில் ஒளிந்து கிடக்கும் ஆத்தும தத்துவத்தை அக்ஞானி ஜனங்களும் அநாயாஸமாய் அறியும்படி சிறியதோர் கிரந்தமியற்றி அதன்வாயிலாக ஸாரமாக உபதேசித்தருள்புரிவார். அதில் உபதேச ஸாரமென்றதோர் அரிய சிறிய க்ரந்தம். அதை நமது ஆர்யதர்மம் எளிய தமிழ் நடையில் வெளியிடமுன்வருகிறது.

அதைப்பார்த்து யாவரும் ஜன்மஸாபல்யத்தை யடைவார்களாக. இவ்விஷயத்தில் அதிலும் ஆத்தும விஷயத்தில் பிறர் உபதேசத்தைக் கேழ்ப்பானேன், நமக்கு மூளையில்லையா? நாமே தெரிந்துகொண்டு விடலாமே? என்று சிலர் நினைப்பார்கள். அது சரியல்ல. ஸ்வபுத்திபாலேயே எல்லோர்களும் ஆத்ம தத்துவத்தைத் தெரிந்து கொண்டிருப்பார்களானுல் ஒருவர் சொல்லுகிறபடியே யாவரும் அதைப்பற்றி சொல்லவேண்டும். பரம பாமரர்களான பிராகிருத ஜனங்கள் முதல் பரோக்ஷஞான முள்ள பண்டிதன் வரை விசாரித்துப்பார்த்தால் ஒருவன் சொல்லுகிறபடி மற்ெருருவன் சொல்லுவதில்லை. ஒரே ஆத்ம வஸ்துவின் உண்மையானஸ்வரூபம் பலவாறுக இருக்காது. ஆகவே ஒவ்வொரு வாதிகளுக்கும் ஒவ்வொரு விதமாகத் தோன்றுவது புத்திதோஷத்தாலேயன்றி வேறல்ல. ஆதலால் தோஷமுள்ள புத்தியால் தீர்மானிக்கப்படுவது ஆத்மாவின் உண்மைஸ்வரூபமாகாது. சுருதி—யுக்தி அனுபவங்களைக்கொண்டு தீர்மானிக்கலாமே யென்ருல்—அதுவுஞ்சரியல்ல, துஷ்டபுத்திகளும் தாங்கள் கண்டுகொண்ட ஆத்துமதத்துவத்தை ஸ்தாபிப்பதற்கு அதற்கநுகுணமாக ஆபாஸமான சில சுருதி வாக்கியங்களையும், யுக்திகளையும், அனுபவங்களையும் எடுத்துக்காட்டுவார்கள். ஆத்மதத்துவத்தைப்பற்றி வாதம் செய்பவர்களுள் நாஸ்திகக் கொள்கையுள்ளவர்கள் சுருதி யுக்திகளைப்பிரமாணமாக நம்புவதே யில்லை, ஆஸ்திகர்களோடு வாதம் புரியும் காலத்தில் மாத்திரம் ஏதோ சில வாக்கியங்களை அதன் கருத்தையறியாமல் கூறுகின்ருர்கள். சம்பிரதாயப்படி குரு முகமாக வேதத்தை அப்பியாஸம் செய்யாததால் அவை ஸித்தாந்த வாக்கியங்களாகிறதில்லை. ஆபாஸங்களாய்விடுகின்றன. அதனுல் குருமுகமாகக் கேட்டால்தான் பரமார்த்த தத்துவம் புலப்படும். ஒருவன் தன் உட்கருத்தை வெளிப்படுத்த வேண்டியதற்காக சப்தப்பிரமாணம் அங்கீகரிக்கப்படவேண்டியதா யிருக்கிறது. அதில் அனேக வாக்கியங்களால் உட்கருத்தை வெளியிடுகையில் பாதியில் அவஸரப்பட்டு ஒன்றையும் தீர்மானிக்கமுடியாது. அவை முழுமையும் கேட்டபிறகுதான் அவைகளினின்று அவன் உட்கருத்தை யறியவேண்டும். முன்னும் பின்னும் பார்க்காமல் ஒரு வாக்கியத்தைமாத்திரம் வைத்துக்கொண்டும் கருத்தை யறிய

முடியாது. அப்படியானுல் அது ஆபாஸமாய்விடும். நாஸ்திகக் கொள்கையுள்ளவர்கள் நடுவில் ஏதோ ஒரு வார்த்தையைத் தாங்கள் கொண்ட கருத்துக்குப் பிரமாணமாகக் காட்டுவார்கள் முன்னும் பின்னும் பார்க்கமாட்டார்கள். வைதிக ஸித்தாந்தத்தை தூஷிப்பதற்கு விதண்டாவாதிகள் சிலர் வேதத்திலேயே நாஸ்திக வாதம் கூறப்பட்டதாகக் கூறுவர். அதாவது யாகசாலைக்காக கொட்டகைபோடும் முறையை விதிக்குமிடத்தில் புகைபோவ தற்கு காலாபக்கத்திலும் விசாலமான அவகாசம் வைக்கவேண்டு மென்ற விதிவாக்கியத்தின் சேஷமான அர்த்தவாதவாக்கியத்தில் "பாலோகமுண்டென எவன்கண்டான்" என்ற பொருளைக் கொடுக்கும் சில பதங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு நாஸ்திக வாதம் சுருதியிலேயே சொல்லப்பட்டதாகக் கூறுவர். இது ராமாயணத்தில் ஸ்ரீராமன் வர்ணிக்கப்படுகிறுரா? அல்லது ராவணன் வர்ணிக்கப்படுகிறுனு? என்று ஒருவன் ஸந்தேஹப் பட்டால்—ராவணன் தவம்புரிந்ததும், திக்குவிஜயம் செய்ததும், தேவகன்னிகைளச் சிறையடைத்ததும், பிரதாபலங்கேசுவான் என்று பட்டம் பெற்றதும் வர்ணிக்கப்படுவதால் ராவணன்தான் வர்ணிக்கப்படுகிறுன்—என்று ஓர் விதண்டாவாதி கூறினதை ஒத்ததாயிருக்கிறது. ஸ்வர்க்கத்திற்கு ஸாதனமாக யாகத்தை விதிக்கவந்தவேதம் நாஸ்திகவாதம் பேசுமா! என்ற ஆலோசனை யில்லாமல் நாஸ்திகவாதத்திற்கு வேதத்தில் ஆதாரம்காட்டுவது ஆபாஸமன்ருே! இதுபோல் நாஸ்திகர் கூறும் வாதம் ஆபாஸ மாகவேமுடியும். ஆதலால் குரு முகமாகவே விசாரம் செய்தால் தான் உண்மைவிளங்கும், சப்தங்களுக்குப் பொருள் படுத்து வதற்கு அனேக நியாயங்களுண்டு. அவைதான் பூர்வோத்தா மீமாம்ஸா நியாயங்களாம். அந்த நியாயமூலமாக ஆசிரியன் சொல்லும் வேதார்த்தந்தான் ஸித்தாந்தமான அர்த்தமாகும். ஆகையால் யாவரும் எதைப்பற்றி விசாரிக்கப் புகுந்தாலும் குரு முகமாகவே விசாரணைசெய்து சிரேயஸ்ஸை அடைய வேண்டும்.

புராணங்களில் புண்ணியகதைகள்

புரஞ்சனேபாக்கியானம்.

சுருதிகளின் கருத்தை சுரோதாக்கள் சுலபமாகத் தெரிந்து கொள்ளும்படி புராணங்களில் புண்ணியகதைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அவைகளில் தர்மாதர்மங்களின் தத்துவமும் ஆத்துமதத்துவமும் பற்பல நீதிநெறிகளும் எளிதாக போதிக்கப் படுகின்றன. அதில் ஸூக்ஷ்மமான பொருளை வெளிப்படையாக கற்பனைசெய்து பரோக்ஷமாகக்காட்டிப் பிறகு ஸ்வாநுபவத்திற்கு வரும்படி விவரணம் செய்துகாட்டப் படுகிறது. அதனால் அற்பக்ஞர்களும் அறிந்துகொள்வது எளிதாகிறது. ஸ்ரீமத் பாகவதத்தில் 4-வது ஸ்கந்தம்-25-வது அத்தியாயம் முதல் ஐந்து அத்தியாயங்களால் ஆத்துமதத்துவம் போதிக்கப்படு கின்றது. அதில் ஸர்வஸித்திக்கும் பரம்பரையாகக் கர்மயோகம் காரணமானலும் அதையே பரமகதியாக நினைப்பது, பெருகிவரும் காட்டாரைப் பொத்தத்தோணியால் தாண்டநினைப்பதற் கொப் பாகும். அதனாற்றான் முண்டகம் முதலிய உபநிடதங்களில் கர்மயோகம் ஸாக்ஷாத்தாக மோக்ஷஸாதனமில்லையெனக் கருதப் படுகின்றது. அதனாற்றான்—

प्राचीनबर्हिषं क्षत्तः कर्मस्वासक्तमानसम् ।
नारदोऽध्यात्मतत्त्वज्ञः कृपालुः प्रत्यबोधयत् ॥

"ஓ! விதுரரே!! கர்மயோகத்திலேயே ஆஸக்தி யடைந்த பிராசீன பர்ஹிஸ் என்பவரைக்கண்டு கருணையடைந்து ஆத்தும தத்து வத்தையறிந்த நாரதர் வந்து போதிப்பித்தார்" என்று மைத்தி ரேயர் நாரதரால் உபதேசிக்கப்பட்ட புரஞ்சனேபாக்கியானத்தை வர்ணிக்கிறார். ஓ! அரசனே!!கர்மயோகமே கதியென்று கருதி யிருக்கிறீரே; இதனால் சிரேயஸ் கிடைக்கமாட்டாது. சிரேயஸ்ஸை யடைய ஆத்துமஞானம்தவிர வேறுவழியில்லை. அதற்காக உமக்குப் புரஞ்சனேபாக்கியானத்தைக் கூறுகிறேன். கேளும் என்று நாரதர் சொல்லுகிறார்—ஜீவனுக்கு விஷயாசையால் ஸம்ஸாரபந்தமே மேலிடுகின்றதேயன்றி மோக்ஷம் கிடைக்காது. அந்த ஸம்ஸாரபந்தம் ஈசுவரானுக்கிரஹத்தால் விலகும், என்று

ஸாக்ஷாத்தாக விபரீத ஞானமுள்ளவனுக்கு போதிக்கமுடியா தெனக்கருதி பரோக்ஷமாக அதை போதிக்க புரஞ்சனோபாக்கியானத்தை ஆரம்பித்தார். மஹாயசஸ்வியான புரஞ்சனனென்னுமோர் அரசனிருந்தான். அவனுக்கு ஓர் ஸ்நேகிதருண்டு ஆனால் அவர்பெயர் அவனுக்குத்தெரியாது. அவர் செய்யும் காரியத்தையும் அவன் அறியமாட்டான். அந்த புரஞ்சனன் தனக்கொரு வீடுவேணுமென்று பதினான்கு உலகங்களையும் சுற்றித்தேடிக்கொண்டு வந்தான். அவ்வளவு தேசதேசாந்தரம் சுற்றிவந்தும் தனக்கு இஷ்டப்பட்ட இடம் கிடைக்கவில்லை. அப்பொழுது மனஞ்சலித்தான். பூமண்டலத்திலும் வந்து அனேக பட்டணங்களையும் பார்த்தான். அனேக போகபோக்கியங்களை அனுபவிக்கவேணுமென்று விரும்பினவனானதால் அவைகளை அனுபவிக்க அந்தப் பட்டணங்களெல்லாம் போதுமானதாக இருக்கவில்லை. அதனால் அவைகளெல்லாம் அவனுக்கு நல்லதாகத் தோன்றவில்லை. ஒருக்கால் அவன் ஹிமாலயத்தின் தென்புறமுள்ள தாழ்வரையில் ஒரு பட்டணத்தைக்கண்டான். அது நகரலக்ஷணம் பூர்ணமாகப் பொருந்தியதாயிருந்தது. தொரந்த கோட்டைவாசல் ஒன்பதும், தொரக்காதவாசல் இரண்டுமுள்ளதாயும், கோட்டைமதள், கோபுரவாசல், வெளி உத்யானவனம், சிங்காரத்தோப்பு, தோரணலங்காரம் இவைகளோடு கூடியதாயும் தங்கம்—வெள்ளி—இரும்பு மயமான மூன்று சிகரம் வைத்த கிரஹங்களும், இந்திரநீலம்—ஸ்படிகம்—வைடூரியம்—முத்துக்கள் மாகதப்பச்சை, மாணிக்கியம் இவை வைத்திழைத்த ஏழு உப்பரிகைகளும், அதில் காணப்பட்டன. ஸபை கூடுமிடம். ராஜவீதி, நான்குவீதிகள் சேருமிடம், அனேக விதமான விளையாடுமிடம், பெரியகடைவீதி, ஜனங்கள் சிரமபரிஹாரம் செய்துகொண்டு உல்லாஸமாயிருக்குமிடம், முதலியவிடங்கள் விசித்திரமாயமைக்கப்பட்டிருந்தன. நாலாபக்கங்களிலும் கொடிமரங்களில் கொடிகள் பரந்துகொண்டிருந்தன. பவழங்களால் மேடைகள் போடப்பட்டிருந்தன. எங்குபார்த்தாலும் பளபளவென்று பாதாளத்திலுள்ள போகவதீ நகரம்போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது. பட்டணத்திற்கு வெளியிலுள்ள உத்யானவனத்தில் தழைத்துப் பூத்துக் காய்த்துப் பழுத்து விளங்கும் பலவகைப்பட்ட மரங்களும், ஒவ்வொரு விருக்ஷங்களிலும், குயில்

கூவுவதும், வண்டுகள் ரீங்காரம் செய்வதும் இனிமையாயிருந்தது. தாமரைஓடைகளில் அன்னபக்ஷிகள் அழகாய் நடப்பது பார்க்கத் தக்கதாயிருந்தது. அருவிகளில் திவலைபட்டுச் சீதளமானகாற்று தாமரைப்பூ வாஸனையுடன் மெதுவாய் வீசுவது மிகவும் ஹிதமாயிருந்தது. ஒன்றையொன்று பாதிக்காமல் நேசமுற்ற பல மிருகங்கள் உலாவிவந்தன. இலைகள் அசைவதையும் குயில்கள் கூவுவதையும் உற்றுப்பார்த்தால் கானகமே வழிப்போக்கர்களை கையாலழைத்துக் கூப்பிடுவதுபோலிருந்தது. அந்தவிடத்தில் தைவவசத்தால் ஓர் உத்தமஸ்திரீ வருவதைக்கண்டான். அனேக தாஸீதாஸ ஜனங்களுக்கு 'நாயகர்களான பதினோருபடர்கள் அவ்வுத்தமியைச் சூழ்ந்துகொண்டுவருகிறார்கள்' ஐந்துதலை நாகமொன்று அங்கரக்ஷகன்போல் காப்பாற்றிவருகிறது, எள்ளுப்பூவொத்த மூக்கும் முத்துவரிசைபோலுள்ள பற்களும் கண்ணாடிபோன்ற கன்னமும், சந்திரபிம்பம்போன்ற முகமும், நடுவில் வண்டுமொய்த்துக்கொண்டசெந்தாமரைப்பூஇதழ்போன்ற கண்களும், கல்லிழைத்த குண்டலம்பூண்ட காதுகளும், பளீரென்று பிரகாசிக்கும் ஒட்டியாணம்போட்ட இடையும், கலீரென்று சப்திக்கும் பாதச்சிலம்பு பூட்டினகால்களும், இவ்வாறு ஒவ்வொரு அவயவங்களும் பார்க்கப்பிரீதியை யுண்டுபண்ணுபவனவாயிருந்தன. சக்கரவாகப்பறவைபோலிணைபிரியாமற் சேர்ந்திருக்கும் கொங்கைகளும், கண்களைக் கவர்ந்தன. அன்னம்போல் அழகிய ஆனைபோல் அசைந்த நடையும் பீதாம்பர உடையும், வாழைபோன்ற துடையும், மனதைமயக்கின. மனதிற்கிசைந்த கருத்தரூபமுடையவளாகவும், கணவனைததேடிவருகிறவளாகவும் காணப்பட்டாள்.

அத்தருணத்தில் அந்த மாது சிரோமணியும் புரஞ்சனனைக் கண்டு வெட்கப்பட்டு மேலாக்கினால் மறைத்து நின்றாள். பிரேமாவினால் மே'வளைந்த புருவமென்னும் வில்லினின்று விடுபட்ட கடாக்ஷமென்னும் காமபாணத்தால் ஸ்பரிசிக்கப்படவே புரஞ்சனன் வெட்கப்பட்டு புன்சிரிப்புடன் விளங்கிவரும் அந்தப்பெண்மணியைக் கேழ்க்கத்தொடங்கினான். ஹே! பங்கஜாக்ஷி!! பெண்மணியே!!! நீயார்? யாரைச்சேர்ந்தவள்? எவருடைய குமாரத்தி? எங்கிருந்து வருகிறாய்? இந்தப்பட்டணத்திற்கு அருகாமையில்

வந்து என்னசெய்ய ஆசைப்படுகிறுய்? உன்னைச்சூழ்ந்துகொண்டு வரும் இந்தபதினேரு படர்கள்எவர்?மற்றும் அநேகபுருஷர்களும் ஸ்திரீகளும்கூடவருகிறுர்களே அவர்கள் எவர்கள்? பாம்பொன்று முன்னுடிவருகிறதே அது எது? தர்மராஜனைத்தேடிவரும லஜ்ஜா தேவியா நீ? அல்லது பரமசிவனைப்பார்த்துவரும் பார்வதியா? ஸாஸிஜாஸனைச்சேரவரும் ஸரஸ்வதியா? மஹாவிஷ்ணுவை நாடி வரும் லக்ஷமியா? அப்படியானுல் உனது கையைவிட்டுக் கனகாம் புஜம் எங்கு விழுந்துவிட்டது? (சற்று ஊன்றிப்பார்த்துச் சொல் லுகிறுன்.) இவர்களுள் நீ ஒருவருமல்ல. ஏனெனில் உனது கால் கள்பூமியைத்தொட்டுக்கொண்டிருக்கின்றனவல்லவா? தேவஸ்திரீ களானுல் அவர்கள்பாதம் பூமியில் படாது. அதனுல் நீ இந்தப் பட்டணத்தில் விஷ்ணுவோடு லக்ஷமீபோல என்னேடுகூட சுக மாய் வாழ்ந்துகொண்டுவருவாய். வெட்கப்படாதே. காமன் கணையால் உன்னிமித்தம் மிகவும் வாடினேன். உன்னுல்தான் எனக்கு ஸகல பாக்கியங்களும் கிடைக்கவேணும். அழகிய உன் முகத்தை நிமர்த்தி என்னைப்பார். உனது இனியகுரலால் ஒரு வார்த்தைசொல், இவ்வளவுசொல்லியும் வெட்கப்பட்டு எதிர்முக மாக நீவரவில்லையே! எப்படியாவது என்னை அனுக்கிரஹிப்பாயாக என்றுபுரஞ்சனன் வேண்டிக்கொண்டான். இவ்விதம்தைர்யமில் லாமல் வேண்டிக்கொள்ளும் புரஞ்சனனைப்பார்த்து, அந்தப்பெண் மணியும் புருஷனைத்தேடி நிற்பவளாதலால் அவனுடைய பிரார்த் தனைக்காக இணங்கியதுபோல் மந்தஹாஸத்துடன் நெருங்கிவந்து அவனைக்கொண்டாடி அவன் கேட்டகேள்விகளுக்குப் பதில் சொல்லத் தொடங்கினுள். ஹே! அரசனே!: என்னைப்படைத்த வனையானறியேன். மற்றவனுக்கும் கர்த்தா யார் என்பதும் எனக்குத்தெரியாது, ஊரும்தெரியாது. பெயரும் தெரியாது. இங்கு நாங்களிருப்பதுமாத்திரம் தெரியும். இந்தப்பட்டணம் என்னுடைய வாஸத்திற்காக ஏற்பட்டது. இதையமைத்தவர் இன்னுரென்பதும் எனக்குத்தெரியாது. என்பின்னுல் காணப் படும் புருஷர்களெல்லாம் எனது தோழர்கள். ஸ்திரீகளெல்லாம் தோழிகள். பதினேரு பேர்களுமப்படியே. இந்த ஐந்துதலை நாகமானது நான் உறங்கும்பொழுது இந்தப் பட்டணத்தைக் காப்பாற்றிக்கொண்டு ஜாக்கிரதையாயிருக்கும். தைவச்செயலாய் தாம் இவ்விடம் வந்தீர். உமக்கு எங்கும் மங்களம் பொங்க

வேணும். உமக்கு எந்தெந்த விஷயத்தில் பிரியமிருக்கின்றதோ? அதையெல்லாம் என் பந்துக்களைக்கொண்டு நொடிப்பொழுதில் தருவித்துக்கொடுக்கிறேன். இந்த ஒன்பது கோட்டைவாசல், கோட்டை கொத்தளம் முதலியவைகளோடு அழகாயமைக்கப்பட்ட இந்த பட்டணத்தில் என்னால் தருவித்துக்கொடுக்கப்பட்ட இஷ்டப்பட்ட போகபாக்கியங்களையெல்லாம் யதேஷ்டமாக அனுபவித்துக்கொண்டு இந்தப் பட்டணத்திற்குத்தாமே அரசனாயிருந்து வாழ்ந்து வருவீராக. உம்மைத்தவிரவேறு எவருடன் ரமிப்பேன். உம்மைப்போல் அவர் ரஸிகராயிருக்கமாட்டார் ஆசையுள்ளவராக இருக்கமாட்டார். அதனால் நீரே எனக்கு பர்த்தா. இந்தப்பட்டணத்திற்குராஜா. எங்களையெல்லாம்வைத்து ஆளவேண்டியபொறுப்பு உம்முடையது. நாமிருவரும் சேர்ந்தோமாகில் கிருஹஸ்தாசிரமத்தை அடையலாம். கிருஹஸ்தாசிரமத்திலிருந்துதான் தர்மம், அர்த்தம், காமம் ஆகிய திரிவர்க்கமும் புத்திர பௌத்திராதி ஆனந்தமும், கடைசியாக மோக்ஷமும் கிடைக்கும். இந்தப்பெருமையும் கீர்த்தியும் இல்லறம் துறந்தவர்க்குக் கிட்டுமா? இஹத்தில் சுகப்படுவதுபோல் துக்க சோகாதிகளில்லாத லோகாந்தரங்களிலும் சுகப்படலாம். இந்த ஸம்ஸாரத்தில் கிருஹஸ்தாசிரமமொன்றுதான், பிதிருக்கள்—தேவர்கள் மனிதர்கள் ஆசிரித பந்துவர்க்கங்கள் இவர்களுக்கும் நமக்கும் க்ஷேமத்தை விளைவிக்குமிடமென்று பெரியோர் சொல்லுவார். ஹே! மஹாராஜா!! என்னைப்போலொத்த எந்த ஸ்திரீதான் வீர்ய சௌர்யாதி ஸம்பன்னனும், கேட்டதையெல்லாம் கொடுப்பவனும் பார்வைக்கே பிரியமாயிருப்பவனுமான தங்களைப்போன்ற தயாளு தானாகவே வந்திருக்கையில் பர்த்தாக ஆகவேண்டுமென வேண்டிக்கொள்ளமாட்டாள். எவளுடையமனம் தங்களிடம் பிரியப்படாமலிருக்கும். என்போலொத்த அநாதைகளை கருணையுடன் காக்கவல்லவன் தங்களைப்போல்யாரிருப்பார். மனம்மகிழ்ந்து முகம்மலர்ந்து அன்புடன்பார்த்து ஆபத்தைவிலக்க எவர் ஸாமர்த்தியம்பெற்றவராயிருப்பர்—என்று பிரார்த்தித்தாள். இவ்விதமாக அந்த தம்பதிகள் அன்யோன்யம் ஸரஸமாகப்பேசிக்கொண்டு அந்தப்பட்டணத்தில் பிரவேசித்து புருஷாயுஸ்பூராவும் பரமானந்தப்பட்டார்கள். அப்படி வாழும்நாளில் சிலகாலம் ஸங்கீத வித்துவான்கள் ஸரஸமாகப்பாட ஸந்தோஷப்படுவார்கள். [சில

காலம் ஸ்திரீகளோடு சிங்காரத்தோப்பில் சிரித்து விளையாடு வார்கள். கோடைகாலத்தில் ஆழ்ந்தமடுவில் மூழ்கி மகிழ்வார்கள். இந்தப்பட்டணத்திற்கு ஒன்பது கோட்டைவாசல்கள் என்று முன் கூறப்பட்டதல்லவா? அவற்றுள் ஏழு வாசல்கள் மேலும் இரண்டு கீழுமாக அமைக்கப்பட்டன. புரஞ்சனமஹாராஜா ஒவ்வொரு வாசல் வழியாக ஒவ்வோரிடம் செல்லுவார். கிழக்குப் பக்கத்தில் ஐந்து வாசல்களும், தெற்குப்பக்கத்திலொன்றும், வடக்குப்பக்கத்திலொன்றும் மேற்குப்பக்கத்தில் இரண்டு வாசல்களுமாக இருக்கின்றன. அவைகளின் பெயர்களையும் அவ்வழியாகப் போகுமிடத்தையும் கூறுகின்றேன். கேளும் அரசே! என்று நாரதர் சொல்லுகிறார். கத்யோதையென்றும், ஆவிர்முகியென்றும் கீழ்திசையிலுள்ள துவாரங்களின் பெயர். அவ்விரண்டும் சேர்ந்தாப்போல் நெருங்கி அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் வழியாக புரஞ்சனமஹாராஜா த்யுமான் என்பவனைஸஹாயமாகக்கொண்டு விப்ராஜிதம் என்றதேசத்திற்குச் செல்வான். அதுபோலவே அதேதிக்கில் நளிநீயென்றும் நாளிநீயென்றுமிரண்டுவாசல்கள்' அவ்வழியாக அவதூதன் என்பவனை ஸஹாயமாகச்சேர்த்துக்கொண்டு ஸௌரபமென்றதேசம் செல்வான். அதேதிசையில் முக்கியமென்ற மற்றோர் வாசல். அதன்வழியாக ரஸக்ஞன்—விபணன் என்றவர்களுடன் ஆபணமென்னும், பஹூதநமென்னும் இரண்டு தேசங்களை அடைவான். தென்திசையிலுள்ள வாசலுக்கு பித்ருஹூ—என்று பெயர். அதன் வழியாக சுருததரன் என்பவனோடு சேர்ந்து தக்ஷிண பாஞ்சாலமென்றதேசம் செல்வான். வடக்குப்பக்கத்திலுள்ள வாசலுக்கு தேவஹூ என்று பெயர், அதன்வழியாக அதே சுருததரனோடு உத்தர பாஞ்சாலமென்ற தேசம் போவான். மேற்குப்பக்கத்திலுள்ள ஓர் வாசலுக்கு ஆஸுரி என்றுபெயர். அவ்வழியாக துர்மதனோடுசேர்ந்து கிராமகம்—என்ற தேசம் போவான். அதேதிசையில் மற்றோர்பக்கத்திலுள்ள வாசலுக்கு நிருருதி என்று பெயர். அவ்வழியாகப் புரஞ்சனன் லுப்தகனோடு சேர்ந்து வைசஸம்—என்ற இடத்திற்குப்போவான். இதில் துறக்காதவாசல் இரண்டு. ஒன்றுக்கு நிர்வாக்கு—என்றபெயர். மற்றொன்றுக்கு பேசஸ்கிருத்-என்று பெயர். அவ்வழியாகப்புரஞ்சனன் எரிக்குதித்துத் திரிவான். ஒரு ஸமயத்தில் அந்தப்புரம்சென்று விஷூசீனன்

என்பவனோடுசேர்ந்து, பத்தினீ, புத்திராதிகளால் நேரும் மதி மயக்கத்தையோ, தெளிவுற்ற மனதையோ, மனக்களிப்பையோ, அடைவான். இவ்விதமாகப் புரஞ்சன மஹாராஜா ஸ்திரீயால் வஞ்சிக்கப்பட்டு, காமாதிகளுக்கிடுபட்டு கர்மாஸக்தனானன். அந்தப் பட்டமஹிஷீ எதெதைச்செய்வாளோ! அதையெல்லாம் சரியென்றே சம்மதித்துவிடுவான். அவள்செய்ததையெல்லாம்தான் செய்ததாகத் தீர்மானிப்பான். அவள் மத்தியபானம்செய்தால் இவனும் செய்வான். சாப்பிட்டால் சாப்பிடுவான். சிரித்தால் சிரிப்பான், பாடினால் பாடுவான். அழுதால் அழுவான். புலம்பினால் புலம்புவான். ஓடினால் ஓடுவான். நின்றால் நிற்பான் படுத்தால் படுப்பான். உட்கார்ந்தால் உட்காருவான். கேட்டால் கேழ்ப்பான். பார்த்தால் பார்ப்பான், முகர்ந்தால் முகருவான். தொட்டால் தொடுவான். துக்கித்தால் துக்கப்படுவான். சுகப்பட்டால் சுகப்படுவான். இவ்வாறு ஏமாந்து தன்மயனாய் மாயாவலையில் சிக்கிக்கொண்டான். ஸத்குரு கிருபையால் நற்கதி பெறுவான்.

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

யயாதி 2

யயாதி பூருவுக்கு பட்டாபிஷேகம் செய்துவைத்து மனைவியுடன் காடுசென்றான். வானப்ரஸ்தாச்ரமம் என்ற மூன்றுவது ஆச்ரம தர்மத்தைக் கைக்கொண்டான். அக்னிஹோத்ரத்தை விடாமல் செய்துவந்தான். பூமியில் சிந்திய தான்யங்களைப் பொறுக்கிப் பாகம்செய்வான். அதிதிகளுக்கு அன்னம்போடுவான். இப்படி ஆயிரம் வருஷந்தவம்செய்தான். 30வருஷம் ஜலத்தைமாத்ரம் குடித்து தவம்செய்தான்.

2. ஒருவருஷம் வாயுவைமாத்ரம் சாப்பிட்டுத் தவம் செய்தான். நாலுபுரத்திலும் நெருப்பை வளர்த்து நடுவேநின்று ஸூர்யனைப் பார்த்து தவம்செய்துவந்தான். ஆறு மாதகாலம் காற்றையே ஆஹாரமாகக்கொண்டு தவம் செய்தான். இவனுடைய தபஸைக்கண்டு பூமியிலுள்ளவர் போற்றினர். வானத்

திலுள்ளவர் வாழ்த்தினர். இந்த உடலைவிட்டு தேவ சரீர மடைந்தான். ப்ருஹ்ம லோகம் வரை போய்வருவான்.

3. ஒருநாள் இந்த்ரன் இவரோடு பேசினர். அச்சமயம் பல தர்மங்களை யயாதி சொன்னர். கோபித்துக்கொள்ளாமலிருப்பது, பொறுமை, கல்வி, முதலியவைகளின் மேன்மையை எடுத்துச்சொன்னர். இந்த்ரன் கேட்டபடி யயாதி அநேக விஷயங்களைப் பேசிவந்தான். தவத்தில் நீ யாருக்கு ஸமானம் என்று இந்த்ரன் கேட்டான். யயாதி மூன்று லோகத்திலும் தவத்தில் எனக்கு ஸமம்எவருமில்லையென்றான். மூவுலகவாஸிகளையும் நீ அவமதித்தபடியால் பாபிஆனய் பூமிக்குப்போ என்று யயாதியை தள்ளிவிட்டான் இந்த்ரன்.

4. யயாதி, தேவேந்த்ரா! கர்வத்தால் நான் கீழே விழுகின்றேன். அங்கே ஸாதுக்கள் மத்தியில் விழும்படிசெய். இல்லாவிட்டால் துஷ்டர்களுடைய சேர்க்கையால் ஸ்வர்க்கத்திற்கு வாாமல் நாகம்போகும்படி நேரிடும் என்றான். இந்த்ரன் அப்படியே அநுக்ரஹம்செய்தான். தேவ சரீரத்துடன் கீழேவிழும் இவரை அஷ்டகன், ப்ரதர்த்தநன், வசுமான், சிபி, என்ற அரச குமாரர்கள் கண்டார்கள். இவர் மூலமாக அவரது சரித்ரத்தை அறிந்தார்கள். பற்பல தர்மங்களைக் கேட்டார்கள்.

5. தவம், தானம், இந்த்ரியங்களை அடக்குவது, மனதை ஜயிப்பது, நாணம், உள்ளும்புறமும் ஒத்திருப்பது, ஸகலப்ராணிகளிடத்திலும் தயை, இந்த ஏழும் சிறந்த தர்மம். இவைகளால் ஸ்வர்க்கம் போகலாம் என்று யயாதி சொன்னன் இதைக் கேட்டு அஷ்டகன் ஸந்தோஷமடைந்தான். அஷ்டகனும் அவன் ஸமீபத்திலிருந்துகேட்டுக்கொண்டிருந்தப்ரதர்த்தனன்,வஸுமான் சிபி, என்ற மற்ற மூன்றுபேரும் தங்கள் புண்யத்தை யயாதிக்கு கொடுப்பதாகச் சொன்னர்கள்.

6. யயாதி இதுவரை நான் கொடுத்திருக்கிறேனேதவிர தானம் வாங்கியதில்லை. ஆகையால் உங்கள் புண்யத்தை வாங்கிக் கொள்ளமாட்டேன் என்றார். இந்த நாலு ராஜகுமாரர்களும் தாங்கள் சேர்ந்துகொடுக்கும் புண்யத்தை வாங்கிக்கொண்டு ஸ்வர்க்கம்போகும்படி பலமுறை வேண்டினர்கள். யயாதி இதை

வேண்டாமென்று மறுத்துவிட்டான் இந்த ராஜ குமாரர்கள் அச்வமேதயாகம் செய்துகொண்டிருந்தனர்.

7. அந்த யாகசாலையில் மாதவி என்ற யயாதியின் பெண் மான்தோலை உடுத்திக்கொண்டு மான்கூட்டத்துடன் வந்தாள். பூமியில் காலைவைக்காமல் தேவசரீரத்துடன் ஆகாசத்தில்நிற்கும் யயாதியைக்கண்டு நமஸ்கரித்தாள் உடனே இவளுடைய பிள்ளைகள் தன் தாயைவணங்கி இவர் யார்? என கேட்டனர். மாதவி யயாதி தன் பிதா என அறிவித்தாள். பிள்ளைவயிற்றில் பிறந்தவருக்கும் பெண்ணின் வயிற்றில் பிறந்தவருக்கும் பேதமில்லை.

8. ஆகையால் என் புதல்வர்கள் கொடுத்த புண்யத்தை வாங்கிக்கொண்டு ஸ்வர்க்கம்செல்லும் என்று மாதவி சொன்னாள். அப்படியே அந்த புண்யத்தால் யயாதியும், இந் நாலு ராஜகுமாரர்களும், திவ்யவிமாநத்திலேறி ஸ்வர்க்கம்போனார்கள். சிபியின் விமாநம் வேகமாக சென்றது. இதற்கு என்ன காரணம் என்று அஷ்டகன் கேட்டான். சிபி எவ்வளவு தநம் ஸம்பாதித்தானோ அவ்வளவையும், தாநம் செய்தான். ஆதலால் அவன் விமாநம் முன்னே செல்கிறது. என்று யயாதிசொன்னார்.

துஷ்யந்தன்.

1. பூருவின் ஸந்ததியில் துஷ்யந்தன் என்று ஓர் அரசன் இருந்தான். இவன் மிக்க தர்மசிலன். தர்மமாக ராஜ்யத்தை ஆண்டுவந்தான். ஒருநாள் வேட்டைஆட காட்டிற்குசென்றான். அங்கு ஒருமான் இவனை வெகுதூரம் இழுத்துக்கொண்டு போய் விட்டது. அங்கே அழகிய ஓர் ஆச்ரமத்தைக்கண்டான். அது கண்வாது ஆச்ரமம் ஸ்வபாவத்திலேயே இவ்வரசனுக்குப் பெரியோரிடம் பிரியம் உண்டு.

2. தவத்தில் சிறந்த கண்வரைத் தர்சிக்கவேண்டுமென்று ஆசைகொண்டான். அந்த ஆச்ரமத்தில் வாசலுக்குப்போய் கண்வரை அழைத்தான். அவர் வெளியில்சென்றிருந்தார். அவரது பெண்ணான சகுந்தலை வெளியில் வந்து அதிதிபூஜை செய்தாள். அவளது அழகைக்கண்டு அரசன் அவளை மணக்க ஆசைகொண்டான். அவள் ரிஷி கன்னிகையோ? அப்படியானால்

அவளை மணப்பது முடியாது என்று அஞ்சினான். அப்படி அல்ல தேவகன்யகை என அறிந்தான்.

3. விச்வாமித்ர் ராஜவம்சத்தில் பிறந்தவர். பிரும்ம ரிஷியாக ஆசைகொண்டார். ஆசையால் கடுந்தவம் செய்தார். அவர் தபஸைக் கலக்க இந்த்ரன் மேநகையை அநுப்பினான். ரிஷி அவளைப்பார்த்து ஏமாந்தார். தபஸைவிட்டார். அவளுடன் கூடி ஸந்தோஷமாக இருந்தார். நல்ல கார்யத்திற்கு விக்நம் வருமல்லவா? இவ்விருவருக்கும் ஓர் அழகான பெண்குழந்தை பிறந்தது. ரிஷி தவம்செய்வதால் குழந்தை தனக்கு வேண்டா மென்றார். மேநகை மநுஷ்யகுழந்தையாதலால் எனக்கு வேண்டாமென்றாள்.

4. குழந்தையை காட்டில் விட்டுவிட்டு இருவரும் போய் விட்டார்கள். திக்கற்றவருக்கு தெய்வமே துணை. ஓர் பக்ஷி தனது ரக்கையை விரித்து இக்குழந்தையைக் காத்தது. இந்த வழியாக கண்வரிஷி வந்தார். பக்ஷிக்கு இருக்கும் அன்பைப் பார்த்து வியந்தார். குழந்தையை ஆச்ரமத்திற்கு எடுத்துவந்து வளர்த்தார். பக்ஷி காப்பாற்றியதால் சகுந்தலா என்ற பெயரை வைத்தார்.

5. சகுந்தலையும் துஷ்யந்தனும் காந்தர்வ விவாஹம் செய்துக்கொண்டார்கள். அரசன் தன்னூர்போய் சதுரங்க ஸேனையை அநுப்பி சகுந்தலையை அழைத்துப்போவதாக சொன்னான். ஆனால், கண்வரிடம் பயந்து பேசாமலிருந்து விட்டான். கண்வர் நடந்த விவாஹத்தைக்கேட்டு அரசன் நல்ல வம்சத்தில் பிறந்தவன். யோக்யன் என்று இதை ஆமோதித்தார் சில மாதமான பிறகு சகுந்தலைக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. ரிஷி அதற்கு ஸர்வதமநன் என்று பெயரிட்டார்.

6. அதிக நாள் பெண்கள் தாய்வீட்டிலிருக்கக்கூடாது. புருஷனைவிட்டுப் பிரிந்திருப்பது நல்லதல்ல என்று கண்வர் யோசித்தார். சிஷ்யனை அழைத்தார். குழந்தையுடன் சகுந் தலையைப் புருஷன்வீட்டில் கொண்டுவிடு என்றார். அப்படியே சகுந்தலை கிளம்பி சென்றாள். அரசன் அரண்மனைக்குப்போய் தான் அரசமனைவி என்று தெரிவித்தாள்.

7. துஷ்யந்தன் இவளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏன்? காட்டிலிருந்துவந்த இவள் யாரோ? இவளை அழகாக இருந்த தால் ராஜா அழைத்துக்கொண்டார். என்று யாராவது எண்ணு வார்களோ? என்று பயந்தான். லோகாபவாதத்திற்கு பயப்பட வேண்டுவது நியாயமல்லவா? சகுந்தலை எவ்வளவோசொன்னாள். மறந்தோ, வேண்டுமென்றோ என்னைத்தள்ளுவது பாபம்என்றாள்

8, என்னசொல்லியும் அரசன் பிடிவாதமாக அவளை ஏற்கவில்லை. மனம்நொந்து குழந்தையுடன் சகுந்தலை தபோ வநத்திற்குப் புறப்பட்டாள். உடனே ஆகாசத்திலிருந்து ஒரு சப்தம் கிளம்பிற்று. அரசே! இவள் உன்மனைவி இச்சிறுவன் உன் புத்ரன். இவன் பலயாகங்களைச்செய்வான். சக்ரவர்த்தி ஆவான் இவர்களை ஏற்றுக்கொள் என்றது.

9. இதைக்கேட்டுஅரசன் அப்படியே ஏற்றுக்கொண்டான் அரசனது நற்குணத்தைக்கண்டு தேவர்களும் ரிஷிகளும் கொண்டாடினார்கள். தக்க வயது வந்ததும் ஸர்வதமனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்துவைத்தான்.

ஸ்ரீவத்ஸ வே ஸோமதேவசர்மா.

வாரவிருத்தாந்தம்.

ஸத்வாஸனை:—ஒரு கார்யத்தைச் செய்தபின் அது ஸூக்ஷ்மமாக இருந்து அதே போன்ற மற்றோர் கார்யத்தைச் செய்யத் தூண்டுகிறது. இதை வாஸனை என்பர் பெரியோர். ஆதலால் நல்ல வாஸனை நற்கார்யத்தையும் மற்றது மற்றதையும் தூண்டும். காரக்குடியில் ஓர்தார்மிக வைச்யர்ப்ரஸவ ஆஸ்பத்ரிகட்ட லக்ஷம் ரூபாய் கொடுத்ததை முன்னறிவித்திருந்தோம். அதேபெரியார் அவ்வூரில் இரண்டு ஆலயத்திருப்பணி செய்ததைக்கேட்க ஆஸ்திகர் மனம் போராநந்தம்பெறும். தார்மிகர் வாழ்க.

திருச்சியிலும் சென்னையிலும்:—சென்னை ப்ரஸிடென்ஸி கலாசாலையிலுள்ள ஸம்ஸ்கிருத வகுப்பை எடுத்துவிடுவதைக் கண்

டித்து திருச்சி ஸ்ரீமான்களான கோபாலாசார், நாராயணகன பாடிகள் தலைமையிலும், சென்னை மைலையில் மஹாமஹோபாத்யாய பிரும்மஸ்ரீ கருங்குளம் சாஸ்திரிகளவாள் தலைமையிலும் ஸ்ரீ சங்கரமடத்திலும் கூட்டம் கூடிற்று பகவததிநம்.

பக்தபுரி வைதிகஸமாஜம்:—3௳ இதனுதாவில் ஸ்ரீராதா கல்யாணம் கும்பகோணத்தில் மிக விமர்சையாக கொண்டாடப்பட்டது. பிராமண ஸமாராதனையும், கதாகாலக்ஷேபங்களும் நடைபெற்றன, ஜட்ஜ் ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் க்ருஷ்ண மஹிமையைப்பற்றி ஓர் அருமையான உபன்யாஸம் செய்தார். கேவல பஜனையுடன் நிருத்தாமல் பரம ஆஸ்திக சிகாமணியும் லௌகிகத்தில் சிறந்தவருமான ஸ்ரீ சாஸ்திரிகள் போன்றவர்களைக்கொண்டு உபன்யாஸம் செய்துவைப்பது மிக ச்லாக்யம்.

ஸ்ரீவைஷ்ணவப் பெண்கள் ஸபை:—5௳ சென்னைமாநகரில் ஷை ஸபை கூடிற்று. பல பெண்மக்கள்கூடி பக்திமார்க்கத்தைப் பற்றி விரிவாக உபன்யஸிக்கக்கேட்டனர். நமது தேசத்தில் மதவிஷயமான ஊக்கம் ஆண்மக்களைவிட பெண்மக்களுக்கு அதிகம் அதை அகற்ற பலர் பகீரதப்ப்ரயத்நம் செய்கின்றனர், இச் சமயத்தில் இவர்கள்கூடி பக்தியை ஆதரித்தது சிலாக்யமே.

பாஷாபிமானி:—8௳ சென்னை கோக்கலே ஹாலில் அரசாங்கம் ஸம்ஸ்கிருதவகுப்பை எடுப்பது கண்டிக்கப்பட்டது. அதற்கென கூடியஸபைக்கு ஸ்ரீமான் பி. ஸம்பந்தமுதலியார் அக்ராஸநம் வஹித்தார். இவர் ஓர் ஜட்ஜும் பல தமிழ் நாடக ஆசிரியருமாவர். இவரது பாஷாபிமான மேலீட்டால் அரசாங்க ஊழியராயிருந்தும் அதன் செயலைக்கண்டிக்க முன்வந்தார்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.